

# மொங்கல் சுட்ட பொங்கல்

storyweaver Community

**Author:** Peruchali Press
**Illustrators:** Abhishikta Dutta, Peruchali Press, abhishikta dutta



ஒரு ஊரில் நிறைய தோட்டங்கள் இருந்தன.

தோட்டத்தில் நிறைய காய்கறிகளும் பழங்களும் இருந்தன.




தோட்டத்திற்கு அடியில், மொங்கல்னு ஒரு பூதம் கோபமாக இருந்தது



அது புழு பூச்சி ஊர்ந்து போச்சுன்னா ‘லபக்’குனு

புடிச்சு சாப்பிட்டு விடும்



பொங்கல் பண்டிகை வருவதால் ஊரே சந்தோஷமாகவும், சத்தமாகவும் இருந்தது.



ஊர்  சத்தமாக இருப்பதால், மொங்கல் கோபமாக இருந்தது.






பொங்கல் கொண்டாடுவதை நிறுத்த, மொங்கல் சூரியனைப் பிடித்து மலைக்குள் மறைத்து வைத்தது.



சூரியன் இல்லாமல் ஊரே இருட்டாகி விட்டது. தோட்டத்தில் காய்கறிச் செடிகளெல்லாம் வாடிவிட்டது.



ஊருல யாருக்குமே சாப்பாடே கிடைக்கல. சூரிய ஒளி இல்லாமல் போனதால் தான் செடிகளெல்லாம் காஞ்சு போச்சுன்னு ஸ்கூல்ல மிஸ் சொல்லுறாங்க.





சூரியனை மலைக்குள்ள அடச்சு வச்சதால
பனி மலை உருகி நிறைய தண்ணீர்
வந்திடுச்சு!





குழந்தைங்க மொங்கல்கிட்ட பேசி சூரியனை
திறந்து விடச் சொன்னாங்க



மொங்கலும் குழந்தைளும் சேர்ந்து சூரியனை வெளியில வரவச்சாங்க.



சூரியன் ‘டொய்ங்’ னு வானில் குதித்தது.
ஊர் மீண்டும் செழிப்பானது.



ஊர் செழிப்பானதால், மொங்கல் எல்லோருடனும் சேர்ந்து சந்தோசமா 'பொங்கலோ பொங்கல்'னு பொங்கலை கொண்டாடியது.